[27th April 1959

SRI V. SANKARAN : May I know, what the demands contained in their Memorandum are?

THE HON. SRI C. SUBRAMANIAM : The first request is that the seniormost typist may be appointed to the supervisory post and designated as ' Superintendent '. The second request is that the proportion between Upper Division and Lower Division Clerks may be fixed as 1 : 3.

SRI S. LAZAR : ஸார், இவர்களுடைய கோரிக்கையை சர்க்கார் ரத்து செய்துவிட்டதாகத் தெரிகிறது. ஆகவே இவர்களுடைய கோரிக்கையைப் பற்றி அரசாங்கம், பே கமிஷனுக்குத் தெரியப்படுத்துமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பே கமிஷனில் எல்லாப் பிரச்னைகளும் விடப்பட்டிருக்கின்றன.

SRI V. SANKARAN : Is it a fact that the ratio between typists and clerks in the Collector's Office and other offices in the districts is 1 : 25 while in the Secretariat it is 1 : 5; and if so, will the Government take steps to remove this disparity?

THE HON. SRI C. SUBRAMANIAM : The working of the Secretariat is different from the working of the taluk offices and other district offices. I do not think we can adopt the same standard for both.

Cultivation of certain kinds of trees

* 165 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) முந்திரி, சவுக்கு, ப்ளுகம், வாட்டில், தீக்குச்சி, தேக்கு முதலிய மரங்கள் 1958-ம் வருடக் கடைசி வரைக்கும் எந்தெந்த இடங்களிலே ஒவ்வொன்றும் எத்தனை எக்கரா நிலங்களில் பயிரிடப்பட்டன ?

(ஆ) பட்ஜெட் நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து 1958-ம் வருடக் கடைசி வரைக்கும் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) A statement [a] showing the details of the area planted with cashew, casuarina, bluegum, wattle, matchwood, teak, bamboos, grass and fodder species, lachost and fuel plantations in various places in the State up to the end of 1958 is placed on the table of the House.

(b) A sum of Rs. 25.07 lakhs has been provided in the Budget for 1958–59 for the cultivation of the above trees and from out of this, a sum of Rs. 17.402 lakhs has been actually spent up to December 1958.

SRI P. G MANICKAM : ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையிலிருந்து இன்னும் சில லட்ச ரூபாய்கள் செலவழிக்கப்படாமல் இருப்பதாக கனம் மந்திரி அவர்கள் தெரிவித்தார்கள். அந்தத் தொகையையும்

[a] Printed as Appendix III on pages 488–490 infra.

27th April 1959]

செலவழிப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ? குறிப்பாக, கோயம் புத்தூர் ஜில்லாவில் தேக்கு மரங்கள், மாட்ச் வுட் இவை பயிராவதற்குரிய சாத்தியங்கள் அதிகமாக இருப்பதால், அத்தகைய மரங்களை அங்கு அபிவிருத்தி செய்ய சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோயம்புத்தூர் ஜில்லா விலே மட்டுமல்ல, இந்த ராஜ்யம் பூராவும் 1,900 எக்கர்களில் மாட்ச் வுட் பயிரிடவேண்டுமென்று டார்ஜெட் போட்டிருந்தோம். ஆனால், 2,050 எக்கர் களில் மாட்ச் வுட் பயிர் செய்திருக்கிறோம். கோயம்புத்தூர் ஜில்லா பற்றிய புள்ளி விவரமும் மற்ற ஜில்லாக்கள் பற்றிய புள்ளி விவரமும் மேசை யின பேரில் வைக்கப்பட்டுள்ள தாளில் குறிப்பிட்டிருப்பதை கனம் அங்கத் தினர் கவனித்திருக்கலாம். 1958-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் செலவான தொகைதான் அதில் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், புதிதாகப் பயிரிடுவதைப் பற்றி திட்டப்படியே இது நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் கவனித்திருப்பார்கள்.

SRI K. RAMACHANDRAN : இராமனாதபுரம் ஜில்லாவில் சிவகெங்கை, திருப்பத்தூர் தாலுக்காக்களில் 'ரெட் க்ராவல் ஸாயில்' இருப்பதால், அந்த மண்ணிலே சவுக்கு, முந்திரி நன்றாக வரும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், அந்த ஜில்லாவிலே மிகவும் குறைவான அள வுக்கு அந்தப் பயிர்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அதை அதிகப்படுத்து வதற்கு அரசாங்கம் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இராமனாதபுரம் ஜில்லா விலே தகுதியான இடங்களில் எல்லாம் சவுக்கு, மற்ற செடிகள் வைத்துப் பயிரிடுவதற்கு இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

SRI K. PONNIAN : பொள்ளாச்சி தாலுக்காவிலே சில இடங்களில் கும்ரி கல்டிவேஷன் நடக்கிறது. கும்ரி கல்டிவேஷனுக்கு ஸீட்லிங்க்ஸ் சர்க்காரி லிருந்து கொடுக்கப்படுகிறதா ? அல்லது அவர்களே தயார் செய்துகொள் கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கும்ரி பயிரிடுகிற இடங் களில் எல்லாம் காட்டிலாகா அதற்கு வேண்டிய விதைகளும் நாற்றுகளும் கொடுக்கின்றார்கள்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : லட்சக் கணக்கான ரூபாய் செலவு செய்து ஒரு பக்கம் மரங்கள் வளர்ப்பதற்கு முயற்சி செய்யும்போது மற்றொரு பக்கம் இருக்கக் கூடிய மரங்களை வெட்டுகிறார்கள். அம்மரங்கள் வெட்டப்படாமலிருப்பதற்கு ஏற்பாடு செய்வதோடு கூட, மரங்களை வெட்டி ஏலம் போடக் கூடிய நேரத்தில் வெட்டப்பட்ட மரத்திற்குப் பக்கத்தில் புதிய மரங்களை வளர்ப்பதுபற்றி அரசாங்கம் யோசனை செய்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றி புதிய யோசனை ஒன்றும் வேண்டாம். வேண்டிய கவனம் செலுத்தப்பட்டுத் தான் வருகிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : முந்திரிக் காடுகள் எத்தனை எக்கர்களில் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன என்று கனம் அமைச்சர் அவர்கள் கூற முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மேஜை பேரில் வைக்கப் பட்டிருக்கும் புள்ளி விவரங்களைப் பார்த்தால் கனம் அங்கத்தினர் அவர் கள் கேட்கும் விவரம் தெரிந்துகொள்ளலாம்.